# பாதுகாப்பு அமைச்சு

# இலங்கை கடற்படை

## விலைமனுக்கோரல் (IFB)

## இலங்கை கடற்படையின் கப்பல்கள் / முகாம்களுக்கான புதிய / உலர் உணவுப் பொருட்களை வழங்கல் மற்றும் விநியோகிப்பதற்கான பெறுகை - 2026 வருடம்

### ஒப்பந்த அடையாள இலக்கம்: *SLN/VICT/ 01/2026*

1. 2026 ஆம் ஆண்டிற்கான முப்படையினர் கடற்படை சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவின் தலைவரினால் (SHLPC) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உணவு வகைகள் மற்றும் விநியோக இடங்களை பொருத்து புதிய மற்றும் உலர்ந்த உணவுப் பொருட்களை கொள்முதல் செய்ய தகுதியான மற்றும் தகைமைகளை உடைய இலங்கையின் வியாபார நிலையங்கள், உற்பத்தியாளர்கள், மொத்த மற்றும் சில்லரை விற்பனை நிலையங்கள், நிறுவனங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து முத்திரையிடப்பிட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. ஒப்பந்த காலம் **2026 ஜனவரி 01** முதல் **2026 டிசம்பர் 31** ஆம் திகதி வரையாகும்.

**1.1 இடங்கள் மற்றும் துணை அலகுகளுக்கு**

**1.1.1 'அ' பிரிவு - புதிய உணவுப்பொருட்கள்**

| தலைமையங்கள் | | உணவு வகைகள் |
|---|---|---|
| 1.1.1.1. கொழும்பு தெற்கு | 1.1.1.2. கொழும்பு வடக்கு | 1. இலங்கையில் காலை / இரவு உணவுகள் |
| 1.1.1.3. கண்டி | 1.1.1.4. திருகோணமலை | 2. பால் பொருட்கள் / ஐஸ்கிரீம் |
| 1.1.1.5. முல்லைத்தீவு | 1.1.1.6. வாகரை | 3. காய்கறிகள் மற்றும் பழங்கள் |
| 1.1.1.7. கிண்ணியா | 1.1.1.8. திரியாய | 4. உறைந்த உணவு |
| 1.1.1.9. காங்கேசன்துறை | 1.1.1.10. ஊர்காவற்துறை | 5. இறைச்சிகள் |
| 1.1.1.11. காலி | 1.1.1.12 தங்கல்லை | 6. வெதுப்பக உணவு பொருட்கள் |
| 1.1.1.13 பூனேவ | 1.1.1.14 மன்னார் | 7. புதிய மீன்கள் |
| 1.1.1.15. புத்தளம் | 1.1.1.16. முல்லிகுளம் | 8. கோழி இறைச்சி |
| 1.1.1.17. மஹவ | 1.1.1.18. பானம | 9. கோழி முட்டை |
| | | 10. மட்டை இல்லாத தேங்காய் |

**1.1.2 'ஆ' பிரிவு - உலர் உணவு வகைகள்**

| தலைமையங்கள் | | உணவு வகைகள் | |
|---|---|---|---|
| 1.1.2.1. கொழும்பு தெற்கு | 1.1.2.2. கொழும்பு வடக்கு | 1. பால்மா வகைகள் | 2.போத்தல் குடிநீர் |
| 1.1.2.3. கண்டி | 1.1.2.4. திருகோணமலை | 3. உலர்ந்த கருவாடு | 4.சமையல் எண்ணெய் |
| 1.1.2.5. முல்லைத்தீவு | 1.1.2.6. வாகரை | 5. தானிய வகைகள் | 6.பேக்கரி உற்பத்தி மூலப்பொருட்கள் |
| 1.1.2.7. காங்கேசன்துறை | 1.1.2.8. காலி | 7. ஊக்க உணவுகள் | 8.அரைத்த மசாலா |
| 1.1.2.9. தங்கல்லை | 1.1.2.10. பூனேவ | 9. மசாலாக்கள் | 10.சர்க்கரை |
| 1.1.2.11. மன்னார் | 1.1.2.12. புத்தளம் | 11. பொதி செய்யப்பட்ட உணவுகள் | 12. பிஸ்கட் |
| 1.1.2.13. முல்லிகுளம் | 1.1.2.14. பானம | 13. சொக்லட் | 14.பாஸ்தா |
| | | 15. கோர்டியல் / ஜாம் / சட்னி / சோஸ் | 16.அரிசி |
| | | 17. பிற உணவு பொருட்கள் | |
| | | 18. தேயிலை | |
| | | 19. உணவு பொதிகள் | |
| | | 20. தலகெரலி | |

1.2 ஒவ்வொரு உணவு வகையிலும் உள்ள உணவுப் பொருட்கள் தொடர்பான விவரக்குறிப்புகள் மற்றும் பிற விவரங்கள் ஏல ஆவணத்துடன் வழங்கப்படும். விநியோகிக்கப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் நல்ல தரம் வாய்ந்தவையாகவும் மனித நுகர்வுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தரங்கள் மனு ஆவணத்திலும் அதன் இணைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதன்படி, அனைத்துப் பொருட்களும் 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் மற்றும் அவ்வப்போது இயற்றப்படும் விதிமுறைகளின் படி இணங்க வேண்டும்.

1.3 **ஒவ்வொரு விநியோக முகாம்கள் மற்றும் உணவு தொகுதிக்காக குறிப்பிட்ட ஒரு நிலையம் / முகாமுக்கு தனித்தனியான ஏலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

1.3.1 ஒரு நிலையம் / முகாமின் குறிப்பிட்ட வகைக்கு ஏலம் எடுக்க, ஏலதாரர் அந்த வகையில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் தனித் தனியான ஏலம் எடுக்க வேண்டும். குறிப்பிட்ட பிரிவில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் ஏலம் எடுக்கத் தவறினால், அத்தகைய ஏலம் பதிலளிக்காததாக கருதப்படும்.

1.3.2 ஒவ்வொரு மனுதாரரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு வகைகளையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விநியோக இடங்களையும் கீழே காட்டப்பட்டுள்ளபடி தனித்தனியாக மனுக்களை இடலாம். அதன்படி, மனுதாரரின் திறன் மற்றும் தகுதிகளுக்கு ஏற்ப மனுக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**1.3.2.1 "அ" தொகுதி - புதிய உணவுப்பொருள் விநியோகமானது ஒவ்வொரு தனிப்பட்ட கப்பல் / முகாம்களுக்கு வழங்கப்படும்**

இந்த பிரிவில் 180 மனுக்கள் இருப்பதுடன், {(18 முகாம் x 10 (உணவு வகைகள்) = 180 மனுக்கள்)} அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

**1.3.2.2 "ஆ" தொகுதி - உலர் உணவுப் பொருட்கள் விநியோகமானது ஒவ்வொரு தனிப்பட்ட கப்பல் / முகாம்களுக்கு வழங்கப்படும்**

இந்த பிரிவில் 274 மனுக்கள் இருப்பதுடன், {(14 முகாம்) x (19 உணவு வகைகள்) + உணவு பொதி விநியோக இடங்கள் 08 = 274 மனுக்கள்)} அவை தனியாக கொள்முதல் செய்தல், விலை மதிப்பீடு மற்றும் தேர்வு செயல்முறையின் படி வேறு வேறாக கருதப்படுகின்றது.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகஸ்தர்களினால் ஒப்பந்தங்களின்படி ஒவ்வொரு விநியோக இடங்கள் மற்றும் துணை அலகுகளுக்கு உணவுப்பொருட்களை கொண்டு செல்வதற்கான பொறுப்பு அவர்களையே சாறும். ஒவ்வொரு விநியோக இடங்கள் மற்றும் துணை அலகுகளுக்கு தொடர்பான மேலதிக விபரங்கள் மனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3. மனுக் கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும். 2024 ஆம் ஆண்டின் 3.1.2 இற்கமைய அரச கொள்முதல் வழிகாட்டலுக்கமைய செயற்படுத்தப்படும். உள்நாட்டு மனுதாரர்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.

4. மனுதாரரின் பெயர் கரைநிறைப் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.

5. கேள்வியுடன் தொடர்புடைய தகுதிகளை நிரூபிக்கும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். தகுதிக்கு பிந்தைய தேர்வில், குறைந்தபட்ச கேள்விகளைச் சமர்ப்பித்து மதிப்பீடு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச ஒப்பந்தத் தொகை, மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விரிவான வழிமுறையின் கீழ் அளவு மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்படும். ஆரம்ப மனு மதிப்பீட்டிற்கு பின்வரும் குறைந்தபட்ச தகுதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

5.1 உணவு வழங்கல் துறையில் குறைந்தபட்ச சராசரி ஆண்டு வருவாய் 2 **நிதியாண்டுகளுக்கு முந்தைய 3 ஆண்டுகளுக்குள் ரூ.08 மில்லியன்.** அந்தந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.2 திரவ சொத்துக்களின் குறைந்தபட்ச அளவு (நிதி அறிக்கைகள் **2023/2024** அடிப்படையில்) **ரூ.5 மில்லியன்.** (இருப்பு பணம், வங்கியில் பணம், குறுகிய கால முதலீடுகள் மற்றும் பெறத்தக்கவைகள்) அந்தந்த தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.3 எவ்வாறாயினும், ஏலதாரர் 2023/2024 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறினால், 2024/2025 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கையை ஏலம் சமர்ப்பிக்கும் திகதியில் சமர்ப்பிக்க வேண்டும்.

5.4 இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் இந்த மனுக்கோரலுக்காக மட்டும் வழங்கும் குறைந்தபட்ச கடன் வரம்பு **ரூ.05 மில்லியனாக** இருக்க வேண்டும்.

5.5 **புதிய உணவுப் பொருட்களை** வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், குளிர் அறைகள்/உறைவிப்பான் மற்றும் குளிர் டிரக் வசதிகள் (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு/வாடகைக்கு பெற்றுக்கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.6 **உலர் உணவுப் பொருட்களை** வழங்குவதற்காக, மனுதாரர் போதுமான களஞ்சிய வசதிகள், போக்குவரத்து வசதிகள், (அந்த வசதிகளின் உரிமம் மனுதாரருக்கு அல்லது அவரால் குத்தகைக்கு/வாடகைக்கு பெற்றுக் கொண்டிருக்கலாம்). பெறுவதற்கான முறையான நடைமுறையைக் குறிப்பிட வேண்டும். கூடுதல் தகவல்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது.

5.7 **கடந்த 05 ஆண்டுகளில் ஏதேனும் நிறுவனத்திற்கு 02 ஆண்டுகள் உணவு மூலப்பொருள் (மொத்த / சில்லரை விற்பனை) விநியோகத்தில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். (அரச / தனியார்)**

5.8 அனைத்து ஏலதாரர்களும் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண்.03 இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

6. மனு ஆவணங்கள் வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் மனுக்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் ஆரம்ப திகதி | - 2025.06.23 |
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - 2025.07.14 பி.ப.3.00 மணி வரை |
| மனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி மற்றும் நேரம் | - 2025.07.15 மு.ப.9.00 மணி வரை |
| (At NHQ) மனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம் | - 2025.07.15 மு.ப.9.30 மணி வரை |

(அத்மிரால் சோமதிலக்க திசாநாயக்க மண்டபம், கடற்படை தலைமையகம்)

7. முன்மனுக் கூட்டம் **2025.06.26** ஆம் திகதி **மு.ப.11.00** மணிக்கு **பாதுகாப்பு அமைச்சின் தலைமையக வளாகம், ஸ்ரீ ஜயவர்தனபுர,கோட்டே, முதலாம் மாடியில் அமைந்துள்ள நந்திமித்ர கேட்போர்கூடத்தில்** இடம்பெறும்**.**

8. கீழ் பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் மனுதாரரின் எழுத்துமூல வேண்டுகோளுக்கு இணங்க பணிப்பாளர் கடற்படை **(உணவு மற்றும் சீருடை)** மூலம் மனுதாரருக்கு மீள வழங்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒவ்வொரு தனிப்பட்ட விநியோக இடங்கள் / முகாம்கள் /நிறுவனங்கள் மற்றும் துணை அலகுகளுக்கு உரிய மனுவிற்கும் வெவ்வேராக மீள வழங்கப்படாத கட்டணம் 6.2 ஆம் பிரிவின் அரச கொள்முதல் வழிக்காட்டல் 2024 இன் படி மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மனுக்களுக்கும் பொருத்தமான மீள வழங்கப்படாத கட்டணங்கள் தொடர்பான தகவல்கள் கீழே பந்தி 16 இல் குறிப்பிடப்பட்டுள்ள **பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீருடை), இலங்கை கடற்படை** எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

9. மனுதாரர் மனு சமர்ப்பிப்பதற்காக மனு ஆவண கோப்பினை மட்டுமே பயண்படுத்த வேண்டும். அனைத்து முத்திரையிடப்பட்ட மனுக்களும் பிரதிகளுடன் பதிவுத்தபாலின் மூலம் அனுப்பவேண்டும் அல்லது இலங்கை கடற்படை, இல-03 (வைத்தியசாலை நுழைவாயில்) இல் இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியினுள் மேலே உருப்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன் இட வேண்டும்.

10. மனுக்கள் திறக்க நியமிக்கப்பட்ட நேரத்தில் மனுக்கள் திறக்கப்படும். காலம் தாழ்த்தி கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்களை திறப்பதற்காக மனுதாரர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு கலந்து கொள்ளமுடியும்.

11. முன்வைக்கப்படும் மனுக்களின் செல்லுபடிகாலம் **2026.03.31** ஆம் திகதி வரையாகும்.

12. மனுக்களுடன் **2026.04.30** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் மனுக்காப்புறுதி பிணையையும் **செயலாளர் பாதுகாப்பு அமைச்சு** எனும் பெயருக்கு முன்வைக்கவேண்டும். அந்த காப்புறுதிப்பிணைகள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கி ஒன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் அற்ற மீள்ளளிக்கப்படாத பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய காப்புறுதிப்பிணையின் ஆரம்ப பிரதியுடன் வழங்க வேண்டும். (குறித்த வங்கியின் உறுதிப்படுத்தப்பட்ட இலட்சினை பெறிக்கப்பட்ட) மனு காப்புறுதிப்பிணையின் பெறுமதி கொள்முதல் செய்யும் வழிகாட்டல்கள் படி மனு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. கொள்வனவாளருக்கு உற்பத்தி அங்கீகார சான்றிதழ் தேவைப்பட்டால். இது ஒரு பிந்தைய தகுதியாக காணப்படும்.

14. மனுதாரர் குறிப்பிட்ட பொருட்களுக்கான மாதிரிகளை ஏல ஆவணத்தடன் சமர்ப்பிக்க வேண்டும். கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மாதிரியை சமர்ப்பிக்க மனுதாரர் தவறினால், தொடர்புடைய மனுக்கள் மேலதிக மதிப்பீட்டிற்கு கருதப்படாது, மேலும் பதிலளிக்காத மனுக்களாக நிராகரிக்கப்படும்.

15. இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியுடைய மனுதாரர்கள் மேலதிக விபரங்களை **கடற்படையின் பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீருடை)** காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை இலவசமாக 16 ஆம் உருப்படியில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் **2025.06.23** ஆம் திகதியில் இருந்து **2025.07.14** ஆம் திகதி வரை **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரை அலுவலக நேரத்தில் பரீட்சீத்துக்கொள்ளமுடியும்.

16. மேல் குறிப்பிடப்பட்ட விலாசம் :

**கவனத்திற்கு** : பணிப்பாளர் கடற்படை (உணவு மற்றும் சீருடை)
**விலாசம்** : கடற்படை தளபதி
கடற்படை தலைமையகம்
த.பெ.இல.593,
கொழும்பு 01.

**தொலைபேசி** : 011-7190000, (நீட்டிப்பு 12351) 011-7192351
**மின்னஞ்சல்** : nhqdnvc@gmail.com

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு,**
**(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2026 வருடம்),**
**பாதுகாப்பு அமைச்சு.**

**2025.06.20**

SELACINE MEDIA SOLUTIONS